# சுபீட்சம்

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.supeedsam.com

வெள்ளிக்கிழமை 25.10.2024 | supeedsam.com | supeedsam@gmail.com







# ராஜீவ்காந்தி தாக்கப்பட்டதைவிட மிகபயங்கரமான தாக்குதலை மக்கள் விடுதலை முன்னணியினர் மேற்கொண்டுள்ளனர்



இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி தாக்கப்பட்டதை விட மிக பயங்கரமான தாக்குதலை மக்கள் விடுதலை முன்னணியினர் மேற்கொண்டுள்ளனர் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் அண்மையில் 13ஆம் திருத்தம் அதன் மூலம் உருவான மாகாண சபை முறை தமிழ் மக்களுக்கு தேவையில்லை என கூறியமை புதிய விடயம் அல்ல. தமிழர்களுக்கு அரசியல் பிரச்சினை உள்ளமையை மக்கள் விடுதலை முன்னணியினர் என்றுமே ஏற்றுக் கொண்டதில்லை.

02 ஆம் பக்கத்தில்...

# சிறிதரனை விலகுமாறு கோரிக்கை



தமிழ் மக்களுக்கு துரோகமிழைக்காது உடனடியாக தமிழ்த் தேசிய விரோத கும்பல் ஆக்கிரமித்து வைத்துள்ள சர்வாதிகார தமிழ் அரசுக் கட்சியிலிருந்தும், நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலிருந்தும் சிவஞானம் சிறிதரன் விலகவேண்டும் என தமிழ் அரசுக் கட்சியின் இளைஞரணி செயலாளரும் ஜனநாயக தமிழரசு கூட்டமைப்பின் நாடாளுமன்ற வேட்பாளருமான கருணாகரன் குணாளன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...






# உரிமைகளை பெறுவதற்கு தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு கரம் சேர்ப்போம்

இழந்துநிற்கின்ற உரிமைகளை பெறுவதற்கு ஒன்றாக குரல் கொடுப்போம். அதற்கு ஆரம்ப புள்ளியாக எமது பெருந்தலைவர்கள் உருவாக்கிய தமிழர் விடுதலை கூட்டணியினை கையில் எடுப்போம் என்று முன்னாள் நுவரெலியா மாவட்டபாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஊடகப்பேச்சாளருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...








# நாடாளுமன்றத்தில் பேரம்பேசும் சக்தியாக ஈ.பி.டி.பியை தமிழ் மக்கள் வலுப்படுத்துவார்கள்..!



அமையவுள்ள புதிய நாடாளுமன்றத்தில் மத்தியில் பேரம் பேசும் சக்தியாக ஈ.பி.டி.பியை தமிழ் மக்கள் வலுப்படுத்துவார்கள் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருமான சிவகுரு பாலகிருஸ்னன் (ஜீவன்) நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது கட்சியின் கொள்கை நிலைப்பாட்டை வலுப்படுத்தி அதனூடாக மக்களின் நலன்களையும் அவர்களது எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்து கொள்வதற்காக நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் எமக்கு அதிகளவு ஆதரவை வழங்கவார்கள்.

02 ஆம் பக்கத்தில்...







## சிறிதரனை விலகுமாறு....

கடந்த ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவு வழங்கியமை தொடர்பில் தமிழரசு கட்சியினரால் விளக்கம் கோரி கடிதமான்று சிறிதரனுக்கு அனுப்பப்பட்டமை தொடர்பில் கருணாகரன் குணாளன் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சி.சிறிதரன் தட்டுத்தடுமாறி வெற்றி பெற்றாலும் அவரால் பாராளுமன்றம் செல்லமுடியாது.

சர்வாதிகார தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் மேற்கொண்டுள்ள ஒழுக்காற்று விசாரணைக்கு அமைய சிறிதரன் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையிலிருந்து நீக்கப்படுவதால் பாராளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டு நடுத்தெருவில் விடப்படுவார்.

தேர்தலில் அவரின் இடத்திற்கு அடுத்த நிலையில் வரக்கூடிய தமிழ்த்தேசிய விரோதியான சுமந்திரன் அணியில் ஒருவர் பாராளுமன்றம் செல்வார்.

இது வாக்காளர்களுக்கு சிறிதரன் தெரிந்து கொண்டும் இழைக்கின்ற பச்சைத் துரோகம் ஆகும்.

மேலும், சிறிதரன் பெற்றுக்கொடுக்கும் வாக்குகளினாலேயே ஆப்ரஹாம் சுமந்திரன் அணி ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தையும் கைப்பற்றப்போகின்றது என்பதனையும் தமிழ்த் தேசிய பற்றாளர்கள் உணர்ந்து செயற்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

## நாடாளுமன்றத்தில் பேரம்பேசும் ....

அத்துடன் மக்கள் எமக்கு வழங்குகின்ற ஆதரவு பலத்தைக் கொண்டே நாம் மத்தியில் அரசமைக்கும் தரப்புக்கு ஆதரவு கொடுத்து, பேரம்பேசும் சக்தியாக அதில் பங்கெடுத்து மக்களின் அபிலாசைகளை பெற்றுக்கொடுக்க முடியும்.

குறிப்பாக அரசியல் புலத்தில் மாற்றம் வேண்டும் என்று எண்ணிய மக்கள் மத்தியில் ஆட்சி அதிகாரத்தை மாற்றி அமைத்துவிட்டனர்.

அதே போன்று தமிழ் மக்களின் மனங்களிலும் அந்த மாற்றம் ஏற்பட வேண்டும். அந்த மாற்றம் ஈ.பி.டி.பியினராகிய எம்மை நோக்கியதாக இருக்கவேண்டும் என்றே மக்கள் உணர்ந்து கொண்டுவிட்டனர்.

இதேவேளை மத்தியில் ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்காவின் அரசியல் கொள்கைக்கும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அரசியல் கொள்கைக்கும் இடையில் ஒற்றுமை இருக்கின்றது.

ஏனெனில் அவர்களும் போராளிகளாக இருந்து பின்னர் நாடாளுமன்ற ஜனநாயக வழிமுறையூடாக வந்தவர்கள். அதே போன்றே ஈ.பி.டி.பியும் இருக்கின்றது. அத்துடன் அவர்களும் இடதுசாரிக் கொள்கை உடையவர்கள் எமது கொள்கையும் இடதுசாரிக் கொள்கையாகவே இருக்கின்றது.

அத்துடன் எமக்கும் அவர்களுக்கும் இடையே இருக்கின்ற அரசியல் ரீதியான கொள்கைகளும், பரஸ்பர புரிந்துணர்வும் சிறப்பானதாகவும் இருக்கின்றது.

இதேவேளை தேர்தல் வந்த பின்னர் தந்திரோபாயங்களை வகுத்து செயற்படுவது எமது கட்சியின் செயற்பாடு அல்ல. அத்துடன் கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்து வாக்குகளை அபகரிப்பதற்காக திட்டங்களை வகுப்பதும் எமது கட்சியின் கொள்கையும் அல்ல.

எமது கட்சி கிடைக்கின்ற அதிகாரங்களை கொண்டு, கடந்த காலங்களில் எமது சிறந்த பொறிமுறைகளூடாக பல்வேறு முயற்சிகளை செய்து பல சாதகமான அடைவுகளை, வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கின்றது. அத்துடன் ஜதார்த்தமான ஒரு பாதையை நோக்கியே தமிழ் மக்களை வழிநடத்தி வருகின்றது.

இந்நிலையில் தற்போதும் ஒரு அரசியல் மாற்றத்துக்கான சூழ்நிலை வந்துள்ளது. அந்த மாற்றம் ஈ.பி.டி.பியினரது எமது பக்கமாகவே இருக்கும் என நம்புகின்றோம்.

அந்த வகையில் தமிழ் மக்கள் தமது வாக்குரிமையைக் கொண்டு வீணைச் சின்னத்தை வலுப்படுத்தி எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களை பலப்படுத்தி அதனூடாக தமிழ் மக்கள் தமக்கான சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்வார்கள் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உரிமைகளை பெறுவதற்கு தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு கரம் சேர்ப்போம்

வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்.

கடந்த காலங்களில் இந்த நாட்டில் இடம்பெற்றுவந்த ஆட்சிமுறைக்கு தலைமை வகித்த இரண்டு படரும் கொடிகள் முக்கியமானது. அதவாது ஐக்கியதேசியகட்சியின் ஆரம்பத்தில் தொடங்கி சுதந்திரகட்சியாக பிரிந்து பின்னர் வெவ்வேறு வடிவங்களில் ஒரேகொடியில் பூத்த மலர்களாகத் தான் அந்த ஜனாதிபதிகள் இருந்துள்ளனர். அந்த கொடிகளுக்கு அவ்வப்போது துணைகொடுத்த செடியாக புறத்தே நின்று புதியமலராக தற்போதைய ஜனாதிபதி கிடைத்திருக்கின்றார். இங்கு நடைபெற்று முடிந்த தேர்தல் நிறைவேற்று அதிகாரத்தை கொண்ட ஒரு தனிநபரை உருவாக்குவதற்கான தேர்தலே அன்றி இந்த நாட்டில் ஜனநாயகத்தை நிறுவுவதற்காக சட்டத்தீர்மானங்களை எடுக்கும் பாராளுமன்ற அதிகாரம் வழங்கப்படவில்லை. எனவே ஒரு தூய பாராளுமன்றத்தை உருவாக்கவேண்டிய தேவை எமக்கிருக்கின்றது. அடுத்த பாராளுமன்றுக்காக தூய உறுப்பினர்களை தேடுகின்ற இந்த நாட்டில் கடந்த 10வருடங்களுக்கு மேலாக தூய அரசியலை நாட்டில்கொண்டுவரவேண்டும் என்று முன்னின்று உழைத்த நாங்கள் இன்று களம் இறங்கியிருக்கின்றோம்.

அதேபோல தூய அரசாங்கத்தை அமைப்பதற்கு தூய எதிர்க்கட்சியும் அவசியம். அதனை நிரப்புவதற்கு வடகிழக்கு மலையகப்பகுதிகளில் வாழ்கின்ற தமிழ்முஸ்லீம் சமூகம் உதயசூரியன் சின்னத்தை ஆதரிக்க வேண்டும். நாங்கள் இழந்துநிற்கின்ற உரிமைகளை பெறுவதற்கு ஒன்றாக குரல் கொடுப்போம். அதற்கு ஆரம்ப புள்ளியாக எமது பெருந்தலைவர்கள் உருவாக்கிய தமிழர் விடுதலை கூட்டணியினை கையில் எடுப்போம். எங்கும் ஒளி பரவட்டும்.

இதேவேளை சங்குசின்னம் எதற்காக உருவாக்கப்பட்டது என்ற விளக்கத்தினை அவர்கள் சொல்ல வேண்டும். அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் போதும் எங்களோடு உரையாடப்படவில்லை. அந்ததேர்தலில் மாத்திரமே சங்கு சின்னம் பயன்படுத்தப்படும அதன் பின்னர்பயன்படுத்தப்படாது என்று சொல்லப்பட்ட கருத்தும் எனக்கு நினைவில் உள்ளது.மீண்டும் அது பொதுத்தேர்தலில்பயன்படுதப்படுவது தொடர்பில் எந்த ஒரு விளக்கமும் எமக்குத்தெரியாது.

தமிழர் விடுதலைக்கூடணியின் வரலாறு சங்கு கூட்டணியில் இருக்கும் தலைவர்களுக்கு தெரியாதது அல்ல. எனவே எந்த இடத்திலிருந்து எந்தபுள்ளியை ஆரம்பிப்பது என்பது கருத்து நிலை தொடர்பானது. ஆனால் அவர்களும் இந்த கூட்டணிக்கு வரலாம். நாங்கள் அனைவரும் இணைந்து ஒரு புதிய கூட்டணி பற்றி சிந்திக்கலாம்.

இலங்கை தற்போது சுதந்திரமடைந்தது போன்ற புதிய நிறைவேற்று அதிகாரத்தை கண்டுள்ள காலகட்டத்தில் நாங்கள் புதிய இலங்கையை பார்ப்பதற்கு புதிய நாளைத்தொடங்கவேண்டும். அதற்கு உதயசூரியன் பொருத்தமான சின்னம் என நினைக்கிறேன். அதனை சங்கு ஊதி நிறுத்த வேண்டாம் என்றும் நினைக்கிறேன். என்றார்.

## ராஜீவ்காந்தி தாக்கப்பட்டதைவிட மிகபயங்கரமான தாக்குதலை ....

அக்கட்சியினர் தேசிய மக்கள் சக்தியாக உருமறைத்துக் கொண்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதோடு நாடாளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை பெறுவதற்காக மேடை அமைத்துக் கொண்டிருக்கையில் தமிழர்களின் அரசியல் விடயத்தில் தமது நிலைப்பாட்டில் எத்தகைய மாற்றமும் இல்லை என்பதை மீண்டும் தெளிவாக, வெளிப்படையாக, உறுதியாக தனது கட்சியின் செயலாளர் மூலம் ஜனாதிபதி அனுரகுமார அவர்கள் மிகுந்த ராஜதந்திரத்தோடு தமது கட்சி செயலாளர் மூலம் வெளிப்படுத்தி உள்ளார்.

இந்தியாவிற்கு உத்தியோக பூர்வமாக வருமாறு இந்திய பிரதமர் அழைப்பு கொடுத்திருக்கும் காலகட்டத்தில் இந்தியாவின் மூக்கை உடைத்து இருப்பது 1987 ல் இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் போது இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி தாக்கப்பட்டதை விட மிக பயங்கரமான தாக்குதலை மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் மேற்கொண்டுள்ளார் எனலாம்.

அது மட்டுமல்ல தற்போதைய வெளிவிகார அமைச்சர் விஜித்த ஹேரத் அவர்கள் இலங்கை தொடர்பாக எந்த ஒரு தீர்மானத்திற்கும்- யுத்த குற்றங்கள் தொடர்பாக ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையையும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்; என்றதோடு 51/1 தீர்மானத்தினை எதிர்ப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கே சவால் விட்டதன் மூலம் இதுவரைக்காலமும் இலங்கை தமிழர்கள் தொடர்பில் ஐ.நா மனித உரிமை பேரவையில் கதைக்கும் பிரேரணை கொண்டுவரும் நாடுகளை தாக்கியுள்ளார்.

இவ்விடயத்தினை இந்தியாவும் ஐ.நாடுகள் மனித உரிமை பேரவையும் எவ்வாறு கையாளப்போகின்றன எனப் பொறுத்திருந்து பார்ப்போம்.இது அவர்களின் பூகோள அரசியல்சார் விடயம். ஆனால் நடக்கப்போகும் தேர்தலில் வெற்றி பெறும் வடகிழக்கு தாயக வேட்பாளர்கள் எந்த அளவிற்கு கூட்டாக ராஜதந்திர ரீதியில் கையாள்வார்கள் என்பதில் பலத்த சந்தேகமே உள்ளது. இவற்றோடு ஜனாதிபதி தேர்தல் பிரச்சார காலத்தில் தற்போது ஜனாதிபதி யுத்த குற்றங்கள் நிகழ்ந்து தமிழர் தாயகத்தில் நின்று ''யுத்தக் குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடக்கும். ஆனால் தண்டனை இல்லை. அதனை பாதிக்கப்பட்டவர்கள் கேட்கவும் இல்லை'' எனக் கூறி காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளை தேடும் குடும்ப உறுப்பினர்களை மட்டுமல்ல யுத்த குற்றங்களுக்கு நீதிகேட்டு நிற்கும் தமிழர்களை அவமானப்படுத்தியதையும் மறப்பதற்கு இல்லை. அவரே யாழ். மண்ணில் ''நான் 13 தருவேன், சமஸ்டி தருவேன் என்று கூறவரவில்லை. தெற்கு மக்களின் மனநிலையோடு உங்களை உருமாற்றிக் கொள்ளுங்கள் என அழைப்பு விடுத்து தமிழர் தேசிய அரசியலுக்கு தமது காலத்தில் இடமில்லை என்பதை அறிவித்து அதன் மூலம் தமிழர்கள் கன்னத்தில் அறைந்து சென்றார். மக்கள் விடுதலை முன்னணியினர் கடந்த காலத்தில் தமிழர்களுக்கு எதிராக புரிந்து செயல்பாடுகள் ஒரு புறம் இருக்க தற்போது ஆட்சி அமைத்திருக்கின்ற சூழ்நிலையிலே அது தீவிரம் பெற்றுள்ளது. இது வெறுமனே நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் மையப்படுத்தி மட்டுமல்ல அதுவே இவர்களின் அரசியல் கொள்கை. இவர்களுக்கு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை மக்கள் ஆணை கிடைத்தால் அதுவே தமிழர் அரசியலுக்கு இறுதி முள்ளிவாய்க்காலாக அமைந்து விடும் அபாயமும் உள்ளது எனலாம். வடகிழக்கு தமிழ்த்தாயகத்தில் அதிகார கதிரைகளுக்காக மக்களை பிரித்து வாக்கு வேட்டையாடுவோர் பல்வேறு முகங்களில் தேர்தல் களத்தில் நிற்கின்றனர். இவர்களில் பலர் வாக்குகளை சிதைக்கவும் களத்தில் நிற்பதோடு நேரடியாக தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு தெரிவிப்போரும் மறைமுகமாகவும் தமது ஆதரவினை வழங்குவோரும் உள்ளனர்.சஜித் பிரேமதாசவும் தற்போதைய ஜனாதிபதிக்கு தனது ஆதரவு உள்ளது என்று கூறியுள்ளார். இவர்கள் அனைவரும் தமிழின படுகொலையாளிகளே.

தற்போதைய தேசிய மக்கள் சக்தியினர் வெளிப்படையாகவே தமிழர்களுக்கு எதிரான அரசியல் நிலைப்பாட்டினை எடுத்தும் நாட்டில் ஊழல்,அதிகார துஸ் பிரயோகம்,அரச சொத்துக்கள் சூறையாடல் விடயங்களை கையில் எடுத்தே நாடாளுமன்ற தேர்தலுக்கு முகம் கொடுக்கிறனர்.

இவர்கள் அரசாங்கத்தில் உருவாகப் போகும் அரசியல் யாப்பு வடகிழக்கு மற்றும் மலையக தமிழர்களின் இன மற்றும் அரசியல் அடையாளங்களை அழிப்பதாகவே அமையும். தமிழர் தாயகத்தில் தேர்தல் களத்தில் நிற்கும் பெரும்பாலான கட்சிகளும் அதன் வேட்பாளர்கள் இந்த அபாயத்தை உடனடியாக தெரியவில்லை மக்களுக்கு சவால்களையும் வெளிப்படுத்துவதாகவும் இல்லை இவள் நோக்கம் ஆட்சி கதிரைகளை கைப்பற்றுவது மட்டுமே.

வடகிழக்கு தமிழர் தாயக வாக்காளர்களே நாடாளுமன்ற தேர்தல் மாவீரர் மாதத்தில் நடைபெற உள்ளது என்பதை நினைவில் கொள்வோம். தேசிய தலைவரின் கொள்கைகள் அக்கொள்கை வழியில் நின்று உயிர் தியாகம் செய்த ஐம்பதா யிரத்துக்கும் அதிகமான போராளிகள் என்பவரை மனக்கண் முன் நிறுத்தி தமிழர் தாயக அரசியலுக்கு எதிராக செயல்படும் சக்திகளை தோல்வி அடைய செய்யும் இலட்சியத்தோடு வாக்குகளை பயன்படுத்துவோம். இல்லையேல் மாவீரர்களுக்கு ஏற்றும் சுடர் தீயாகி எம் வாழ் நாளையே சுட்டெடரித்து விடும் .



# பொத்துவிலில் மக்கள் பிரதிநிதித்துவத்தை வென்றெடுக்க எமது கட்சியே பாடுபட்டது

## ஒன்றுபட்டு உழைத்தால் இரு எம்.பி.க்களை பெறலாம்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு துரோகம் செய்த எவரும் அரசியலில் நிலைக்கப்போவதில்லை, இம்முறை பொதுத் தேர்தல் முடிவுகள் இதனை உண்மைப்படுத்தும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

பொத்துவிலில் புதன்கிழமை (23) நடந்த கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அம்பாறை மாவட்ட வேட்பாளர் என். எச்.முனாஸை ஆதரித்து இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பொத்துவில் பிரதேசத்தில் ஒரு பிரதிநிதித்துவம் அவசியம். இதற்காகவே, பல தடவைகள் எமது கட்சி இங்கு வேட்பாளர்களை நிறுத்தியது. 2015 பொதுத் தேர்தலில், எஸ்.எஸ்.பி.மஜீதை வேட்பாளராக்கினோம். இந்த ஊரில் மாத்திரம் அவருக்கு 45000 வாக்குகள் அளிக்கப்பட்டன. இதையடுத்து வந்த பொதுத் தேர்தலில் முஷர்ரபை வேட்பாளராக்கினோம். பொத்துவில் மக்கள் வழங்கிய 95000 வாக்குகளுடன் வேறு பிரதேச வாக்குகளும் கிடைத்ததால், முஷர்ரப் எம்.பி.யாகத் தெரிவானார்.

இவரின் வெற்றிக்காக ஊரே உழைத்தது. பலரும் நிதியுதிவி செய்தனர். ஓட்டோ ஓடுபவர்கள், நாளாந்தத் தொழிலாளிகள் மற்றும் வெளிநாடுகளில் உழைப்போர் எனப் பலரும் நிதியுதவி வழங்கி முஷர்ரபை வெல்ல வைத்தனர். ஏன்? ஊரின் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பதற்கே. ஆனால், அவர் செய்த வேலைகளால், பொத்துவில் நற்பெயருக்கே களங்கம் ஏற்பட்டது.



எமது மார்க்கத்தில் ஹராமாக்கப்பட்ட சாராயக் கடையைத் திறந்து, தனது பொக்கற்றை பலப்படுத்தினார். கனடா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவதாக மக்களிடம் பணம் வாங்கி மோசடி செய்தார். இவ்வாறானவர்களுக்கு எமது கட்சியில் இடமில்லை. இம்முறை மக்கள் அவருக்கு பாடம் புகட்டுவர்.

டொக்டர் இஸ்ஸடீன் போட்டியிட முன்வந்தபோதும், சில சிக்கல்களால் அவர் விட்டுக் கொடுத்தார். இதனால், சகோதரர் முனாஸை வேட்பாளராக நிறுத்தியுள்ளோம். பொத்துவில் பிரதேச சபை உறுப்பினராக இருந்த இவரிடம் நல்ல அனுபவங்கள் உள்ளன. மக்களும் இவரை மதிக்கின்றனர்.

எமது வேட்பாளர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு உழைத்தால், அம்பாறை மாவட்டத்தில் இரண்டு எம்.பி.க்களை வெல்ல முடியும்.

அம்பாறை மாவட்டத்தில் இன ஒற்றுமை அவசியம் பேணப்படல் வேண்டும். விஷேடமாக தமிழ் மக்களுடன் நல்லுறவைக் கட்டியெழுப்புங்கள். மூவினத்தவரையும் அரவணைத்துச் செல்லும் கட்சியே அகில இலங்கை மக்கள் காங்கிரஸ். இங்குதான் அரசியல் ஆளுமைகள் வளர்க்கப்படுகின்றன. மக்களின் அமானிதமே எங்களுக்கு முக்கியம். இதனால், இம்முறை போட்டியிடும் சகல வேட்பாளர்களிடமும் உறுதியான சத்தியக்கடதாசி வாங்கியுள்ளோம். சமூகத்துக்கு துரோகமிழைப்போர், அரசியலில் நிலைத்ததாக வரலாறே இல்லை என்று கூறினார்.

## செய்தியால் பலன்; மக்கள் மகிழ்ச்சி

# கொக்கட்டிச்சோலை பிரதான வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்





( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கான பிரதான வீதி குன்றும் குழியுமாக படுமோசமாக பாதிக்கப்பட்டிருந்ததாக எமது நிருபரால் வெளியிடப்பட்ட செய்திக்கு கைமேல் பலன் கிடைத்திருக்கிறது.

குறித்த மகிழடித்தீவு சந்தியிலிருந்து அம்பிளாந்துறைச்சந்தி வரையான பிரதான வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் எடுக்கும் நில அளவை மதிப்பீட்டு பணிகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

இவ் மிக மோசமாக போக்குவரத்துக்கு பொருத்தமில்லாதவகையில் பாதிக்கப்பட்டு இருந்தது. அதனால் வாகனங்கள் பாதசாரிகள் மிகவும் அசௌகரியமடைந்துவந்தனர்.

இந்த வீதியில் பிரதேச செயலகம் பிரதேச சபை பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆசிரியர் வள நிலையம் கோட்டக்கல்வி அலுவலகம் பல பாடசாலைகள் இவ்வாறு பல முக்கியமான நிறுவனங்கள் அமைந்திருக்கின்றன.

ஆனால் அதற்கான இந்த பிரதான வீதி பல வருட காலமாக செப்பனிடப்படாமல் கைவிடப்பட்ட காரணத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டு இருந்ததாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனைக் கண்ணுற்ற சம்பந்தப்பட்ட தரப்பினர் இவ் வீதியை புனரமைப்பு செய்ய ஆரம்பித்துள்ளனர். வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஏற்பாட்டில் குதணதீணி ஃச்ணடுச் கதிஞ ஃஞஞீ. இப் புனரமைப்பு பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்து ஊடகங்களுக்கும் நடவடிக்கை எடுத்த சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் நன்றி தெரிவிக்கின்றனர்.

# புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டனர்





(தலவாக்கலை பி.கேதீஸ்)

மத்திய மாகாணத்திலுள்ள பல நிறுவனங்களுக்கு புதிய தலைவர்களை நியமிக்க மத்திய மாகாண ஆளுநர் எஸ். பி. எஸ். அபயகோன் நடவடிக்கை எடுத்துள்ளார். இதன்படி, மத்திய மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் தலைவராக காமினி ராஜகருணா, மத்திய மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையின் தலைவராக பி. எஸ். கே. லங்கேஸ்வரகே, மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவராக பி. பி. ஏ. என். சந்திரசிறி மற்றும் மத்திய மாகாண நூலக சேவை சபையின் தலைவராக எம்.அம்கஹவத்த ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்களை மத்திய மாகாண ஆளுநர் எஸ். பி. எஸ். அபயகோன் மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து வழங்கி வைத்தார்.

# திருமலையில் பாடசாலை மத்தியஸ்தம் தொடர்பான விழிப்புணர்வு பயிற்சி..!



(அ . அச்சுதன்)

திருகோணமலை மாவட்ட செயலகம், நீதி அமைச்சு மற்றும் பிரிட்டிஷ் கவுன்சிலின் ஏற்பாட்டில் பாடசாலை மத்தியஸ்தம் தொடர்பான விழிப்புணர்வு பயிற்சி நெறியானது பாடசாலை ஆசிரியர்களுக்கு (22) மற்றும் (23) ஆம் திகதிகளில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது. 'பாடசாலை மாணவர்கள் தங்களுடைய பிணக்குகளை தாமே தீர்த்து கொள்ளுதல்' என்ற தொனிப்பொருளின் கீழ் இவ்விழிப்புணர்வு பயிற்சி நெறியானது ஆசிரியர்களுக்கு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த ஐந்து பாடசாலைகளை தெரிவு செய்து ஒரு பாடசாலையிலிருந்து ஐந்து ஆசிரியர்கள் வீதம் மொத்தமாக 25 ஆசிரியர்கள் இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

இதன்போது மாவட்ட மத்தியஸ்த உத்தியோகத்தர் பு.பவானி, பிரதேச செயலக மத்தியஸ்த உத்தியோகத்தர்களான பிறின்சி நிலோஜினி, நிஜாம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

# நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மீது விழுந்த ட்ரோன்

(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தின் மீது புதன்கிழமை (23) பிற்பகல் பறந்து கொண்டிருந்த ட்ரோன் கெமரா ஒன்று மின் உற்பத்தி நிலையத்தின் மீது விழுந்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை விமானப்படை மற்றும் ஏனைய பாதுகாப்புப் படையினர் ஆரம்பித்துள்ளதாக புத்தளத்தில் உள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆளில்லா விமானத்தின் கெமரா மூலம் லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுவதாக பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், சட்டப்பூர்வ அனுமதியின்றி ஆலைக்கு மேலே ட்ரோன் கேமராவை பறக்கவிடுவது சட்டவிரோதமானது.

குறித்த ட்ரோன் கெமரா தொடர்பான மேலதிக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மட்டக்களப்பில் காப்புறுதி செய்யப்பட்ட அஞ்சல் வாக்குச்சிட்டுக்கள் கையளிப்பு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பில் காப்புறுதி செய்யப்பட்ட அஞ்சல் வாக்குச்சிட்டுக்கள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ். ஜெகனிடம் (23) திகதி கையளிக்கப்பட்டது.

பாராளுமன்று தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 திகதி இடம் பெறவுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் கடமை மேற்கொள்ளவுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கான அஞ்சல் வாக்குச்சிட்டுக்கள் கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் உதவித் தேர்தல்கள் ஆணையளர் எம்.பி.எம் சுபியான், மற்றும் உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிப்பதற்குரிய கண்டியில் அரசியல் சூழ்ச்சிகள் நடக்கின்றன

## கண்டி மாவட்டத்தின் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் பாரத் அருள்சாமி

(க.கிஷாந்தன்)

பாராளுமன்ற பிரதிநிதித்துவமென்பது, அரசியல் வாதிகளுக்கு மக்களால் வழங்கப்படும் உயர் பதவியாகும். அது தனிநபருக்குரிய சொத்தோ அல்லது குடும்பத்துக்குரிய சொத்தே கிடையாது. எனவே, அந்த உயரிய பதவியை இம்முறை எனக்கு வழங்குவதற்கு கண்டி மாவட்ட மக்கள் தீர்மானித்துவிட்டனர் - என்று ஐக்கிய மக்கள் கூட்டணியின் கண்டி மாவட்ட வேட்பாளர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

பொதுத்தேர்தலுக்கான தேர்தல் பிரசாரத்தை சர்வமத வழிபாடுகளுடன் பாரத் அருள்சாமி (24.10.2024) இன்று ஆரம்பித்தார்.

அதில் முதலாவதாக கண்டி கட்டுக்கலை ஶ்ரீ செல்வ விநாயக ஆலயத்திற்கு சென்று விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுப்பட்டார்.

இவருடன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட அமைப்பாளர் விஷ்வா, செயற்குழு உறுப்பினர்களான குலேந்திரன், கலாதாரன், உமா மகேஸ்வரி, கிருஷ்னா விஜேந்திரன், சேகர் என பலரும் கலந்துக் கொண்டனர். வழிபாடுகளின் பின் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் மேலும்





கூறியவை வருமாறு,

தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசி சின்னத்தின்கீழ் பொதுத்தேர்தலில் இம்முறை கண்டி மாவட்டத்தில் போட்டியிடுகின்றேன். அதற்கான பிரசாரத்தை இன்று இறையாசியுடன் வெற்றிகரமாக ஆரம்பித்துள்ளேன்.

கண்டி மாவட்டத்தில் தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவதற்குரிய விதையை 2010 ஆம் ஆண்டு எமது தலைவர் மனோ கணேசன் விதைத்தார். அந்த விதைமூலம் 2015 இல் அறுவடை கிடைத்தது. ஆனால் இன்று தமிழ்ப் பிரதிநிதித்துவம் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளது. எனவேதான் கண்டி மாவட்டத்துக்குரிய தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க தலைவர் மனோகணேசனின் நேரடி வழிகாட்டலுடன் தேர்தலில் போட்டியிடுகின்றேன். நிச்சயம் மக்கள் ஆணை கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிப்பதற்குரிய கண்டியில் அரசியல் சூழ்ச்சிகள் நடக்கின்றன. அந்த சூழ்ச்சிகளையெல்லாம் முறியடித்து நிச்சயம் நாம் வெற்றிபெறுவோம்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். இது நல்ல விடயம். அவ்வாறு நடந்தால் நாடாளுமன்ற ஆட்சி முறைமை உருவாக்கப்படும். முழு அதிகாரமும் நாடாளுமன்றம் வசம் இருக்கும். எனவே, எமது கண்டி மண்ணுக்கு தமிழ்ப் பிரதிநிதித்துவம் காலத்தின் கட்டாயமாக அமையும். தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதியாக மக்கள் என்னை பாராளுமன்றம் அனுப்பி வைப்பார்கள்.

பாராளுமன்ற பிரதிநிதித்துவமென்பது மக்கள் எமக்கு வழங்கும் பதவி. அது தனிநபருக்குரிய சொத்து அல்ல. அந்த பதவியை இம்முறை எனக்கு வழங்குவதற்கு கண்டி மாவட்ட மக்கள் தீர்மானித்துவிட்டனர். தமிழ் மக்களின் பிரதிநிதியாக மட்டுமல்ல கண்டியில் வாழும் அனைத்து மக்களினதும் குரலாக நான் ஒலிப்பேன்.

இலங்கை ஜனநாயக நாடு. எவரும் தேர்தலில் போட்டியிடலாம். அது அவர்களின் உரிமை. ஆனால் சிலர் சுயநல அரசியலுக்காக போட்டியிடுகின்றனர். மேலும் சிலர் வாக்குகளை சிதறடிப்பதற்காக போட்டியிடுகின்றனர். எனவே, மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். ஐக்கிய மக்கள் கூட்டணியின் தமிழ் வேட்பாளரான என்னை வெற்றிபெறவைப்பதில் மக்கள் உறுதியாக உள்ளனர்.

# தேர்தல் காலங்களில் மாத்திரம் வரும் பரசூட் வேட்பாளர்கள்





(க.கிஷாந்தன்)

தேர்தல் காலங்களில் மாத்திரம் நுவரெலியா மாவட்டத்துக்கு வரும் பரசூட் வேட்பாளர்களை நம்ப வேண்டாம். வாக்குகளை சிதறடித்து தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்வதற்கு வந்துள்ள சில சுயேச்சைக்குழுக்கள் தொடர்பிலும் மக்கள் விழிப்பாகவே இருக்க வேண்டும். - என்று இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.

தலவாக்கலை பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு,

எனது 20 வருடகால அரசியலில் மலையக மக்களுக்கு நிறைய சேவைகளை செய்துள்ளேன். மக்களுக்கு சேவைகளை வழங்குவதே காங்கிரஸின் பிரதான நோக்கம். எமது பொதுச்செயலாளரும் அமைச்சராக குறுகிய காலப்பகுதிக்குள் பல சேவைகளை செய்துள்ளார். நாம் மக்களுடன் நிற்பதால்தான் எல்லா தேர்தல்களிலும் எம்மை வெற்றிபெற செய்துள்ளனர்.

நுவரெலியா மாவட்டமென்பது மலையக மக்களின் அரசியல் இருப்பாகும். அங்கு தமிழ்ப் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். சுயேச்சையாக பலர் போட்டியிடுகின்றனர். அவர்கள் வெற்றிபெற்றால் மகிழ்ச்சிதான். ஆனால் வாக்குகளை சிதறடிப்பதே சிலரது நோக்கமாக உள்ளது. மேலும் சிலர் தேர்தல் காலங்களில் மாத்திரம் நுவரெலியாவுக்கு வருகின்றனர்.

தேர்தல் முடிந்ததும் காணாமல்போய் விடுவார்கள். ஆனால் நாம் தோட்டத்தில் மக்களோடு மக்களாக வாழ்கின்றோம். எனவே, எமது மக்கள் எம்மை ஆதரிப்பார்கள் என முழுமையாக நம்புகின்றோம்.

மலையக மக்களுக்கு காங்கிரஸ் எதையும் செய்யவில்லை எனக் கூறப்படுவது அப்பட்டமான பொய்யாகும். தோட்டப் பகுதிகளுக்கு வந்து பார்த்தால்தான் எமது அபிவிருத்தி திட்டங்கள் தெரியும். உரிமை மற்றும் அபிவிருத்தி அரசியல் இரண்டையும் செய்துள்ளோம். இது மக்களுக்கு தெரியும்.- என்றார்.

# மன்னாரில் சில மணி நேரம் பெய்த கன மழையால் 1898 குடும்பங்களும் 7023 நபர்களும் பாதிப்பு








(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் வியாழக்கிழமை (24) அதிகாலை தொடக்கம் காலை வரை கடும் இடியுடன் பெய்து வந்த தொடர் மழையின் காரணமாக மன்னார் மற்றும் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுகளில் சில இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மன்னார் மாவட்டத்தில் தற்பொழுது கிடைக்கப்பெற்ற தகவலின்படி மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 1898 குடும்பங்களும் 7023 நபர்களும் தற்பொழுது இந்த வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மூன்று இடங்களில் மக்கள் இடைக்கால முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மன்னார் நகரைப் பொறுத்தமட்டில் செல்வநகர் ஶ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய பொது மண்டபத்தில் 16 குடும்பங்களைச் சார்ந்த 53 நபர்களும்

எமில்நகர் பகுதியில் அன்னை தெரேசா பாடசாலையில் 43 குடும்பங்களைச் சார்ந்த 158 நபர்களும்,

ஓலைத்தொடுவாய் பகுதியில் 03 குடும்பங்களைச் சார்ந்த 11 நபர்கள் இடம்பெயர்ந்து பொது இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர் பிரதேச செயலகப் பிரிவில் மன்னாரில் பெய்த கன மழை காரணமாக மொத்தமாக 1608 குடும்பங்கள் சார்ந்த 5883 நபர்கள் கடும் பாதிப்பகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் 290 குடும்பங்களைச் சார்ந்த 1390 நபர்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 1898 குடும்பங்களும் 7023 நபர்களும் தற்பொழுது இந்த வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் பல தாழ்ந்தப் பகுதிகள் வெள்ளக் காடுகளாகக் காணப்படுகின்றது.

பாதிப்படைந்த மக்களுக்கு மன்னார் மாவட்ட செயலகம் அனர்த்த முகாமைத்துவ பிரிவு . பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம அலவலர்கள் ஊடாக நிவாரணப் பணிகளை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மன்னாரில் இரவு தொடக்கம் வியாழக்கிழமை (24) காலை வரை மிகவும் கடும் மின்னல் மற்றும் இடியுடனான கன மழையால் இந்நேரத்தில் மக்கள் வெளியேற முடியாத நிலை காணப்பட்டதால் வீதிகள் வெறிச்சோடி காணப்பட்டதுடன் பாடசாலைகளுக்கு 25 வீதமான பிள்ளைகளே பாடசாலைகளுக்கு சென்றதாகவும் இதன் வட்டாரம் தெரிவித்தது.

அத்துடன் மழை ஒய்வுறுவரையும் இங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்த நிலை காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# அம்பாறை மாவட்ட தமிழ் வாலிப வாக்காளர்கள் சிந்திக்க வேண்டும்!

## ஊடக சந்திப்பில் சங்கு வேட்பாளர் லிங்கேஸ்வரன் வேண்டுகோள்

**( வி.ரி.சகாதேவராஜா)**

1995க்கு பிற்பாடு பிறந்த வாலிப வாக்காளர்கள் இம்முறை தேசிய அரசியலின் பக்கம் இருப்பதாக கூறப்படுகிறது.இது ஏனைய மாவட்டங்களுக்கு அல்லது ஏனைய இனங்களுக்கு பொருத்தலாம்.ஆனால் அம்பாறை மாவட்ட தமிழ் வாலிப வாக்காளர்களுக்கு ஒருபோதும் பொருந்தாது.இதனையிட்டு அவர்கள் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் அம்பாறை மாவட்ட வேட்பாளரும் கல்முனைஐக்கிய வணிக சங்கத் தலைவரும் பாண்டிருப்பு அனைத்து ஆலயங்களின் ஒன்றிய நிர்வாகசபை உறுப்பினருமான கிருஷ்ணபிள்ளை லிங்கேஸ்வரன் தெரிவித்தார்.

அவரது ஊடகச்சந்திப்பு காரைதீவில் உள்ள அம்பாறை ஊடக அமையத்தில் (24) வியாழக்கிழமை இடம்பெற்றது .

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்..

அம்பாறை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி ஒரு வேளை மூன்று ஆசனங்கள் எடுத்தாலும் அந்த அணியில் கேட்கின்ற தமிழர் ஒரு போதும் வரவே முடியாது . அப்படி வந்தாலும் அவரால் தமிழருக்காக குரல் கொடுக்கவும் முடியாது. அபிவிருத்தி செய்யவும் முடியாது. எனவே அவர்களுக்கு அளிக்கும் உங்களது வாக்குகள் தமிழ் மகனை வர வைக்க போவதில்லை. மாறாக மாற்றின பிரதிநிதியைத்தான் வரவைக்கும் என்பதை தமிழ் வாலிப வாக்காளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் . எனவே பொன்னான வாக்குகளை வீணாக்காமல் வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்து தமிழ் பிரதிநிதி வர ஒத்துழைப்பு நல்குங்கள்.

கடந்த முறை தமிழ் பிரதிநிதித்துவம் அம்பாறை மாவட்டத்தில் இழக்கப்பட்டதற்கு கருணா காரணம் இல்லை .கூட வாக்கெடுப்பதை விட குறைவாக வாக்கெடுத்து வாக்குகளை பிரிப்பவன் தான் அதற்கு காரணமாக இருக்க முடியும்.

அப்படிப் பார்த்தால் 1994 ஆம் ஆண்டிலே மாவை சேனாதிராசா இங்கு வந்து பிரதிநிதித்துவத்தை இழக்கச் செய்தார். இதனை தமிழரசுக் கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டும் .




நாங்கள் திருகோணமலை மாவட்டத்திலே சம்பந்தன் பிறந்த நகர் என்பதால் அங்கு வீட்டுக்கு விட்டுக்கொடுத்தோம். ஆனால் அம்பாறை மாவட்டத்தில் அவர்கள் தேவையற்ற சாட்டுகளை சொல்லி ஒற்றுமையில் இருந்து தவறி விட்டார்கள். அதன் விளைவாக நாங்கள் சங்குச் சின்னத்தில் கேட்க நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

கடந்த காலங்களில் இந் தமிழரசுக் கட்சி அம்பாறை மாவட்ட தமிழர்களுக்கு செய்த துரோகம் கொஞ்சம் நெஞ்சம் இல்லை.

2015இல் கிழக்கு மாகாண சபையை தாரை வார்த்து கொடுத்தது.

2019ல் நாம் உண்ணாவிரதம் இருந்த போது எத்தனையோ பொன்னான வாய்ப்புகள் இருந்தும் கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை வேண்டும் என்று கிடப்பில் போட்டது.

இவை எல்லாம் வரலாற்றில் அழிக்க முடியாத துரோகங்கள் .

இன்று அவர்கள் புனிதர்களாக வலம் வருவதாக கூறுகிறார்கள் .

புதிய அரசாங்கம் ஊழலை இல்லாத ஒழிக்க வேண்டும் என்று செயற்பட்டு வருகின்றது. அதைத்தான் நானும் விரும்புகிறேன்.

சட்டம் அதன் கடமையை செய்கின்றது. நேற்று ஜோன்சன் பெர்னான்டோ கைது செய்யப்பட்டார். பிள்ளையான் 588 கோடி ஊழல் செய்ததாக கூறப்படுகிறது .தமிழ் மக்களுக்கு குறிப்பாக கல்முனை தமிழர்களுக்கு துரோகம் செய்தவர் வியாழேந்திரன். அவர் பெரிய ஊழல்வாதி. 3 வருடத்தில் பாரிய சொத்து சேர்த்தவர். எல்லாம் சட்டத்தின் முன்னிறுத்தப்படும் காலம் தொலைவில் இல்லை .

எனவே கடந்த காலங்களிலே 2500க்கும் குறைவான வாக்குகளை பெற்று மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களை அல்லது அந்த கட்சிகளை நீங்கள் அடியோடு மறந்து விடுங்கள். அவர்களை இம்முறை நிராகரியுங்கள்.

நீங்கள் விரும்பினால் சங்குக்கு வாக்களியுங்கள் அல்லது வீட்டுக்கு வாக்களியுங்கள்.

ஒருவேளை அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் இழக்கப்படுமாக இருந்தால் அதற்கு காரணம் எந்த அணி மிகக் கூடுதலான வாக்குகளை பெறுகின்ற அல்லது வெற்றி பெறுகின்ற அணியை விட ஒரு வாக்குத்தானும் குறைவாக எடுக்கின்றதோ அந்த அணிதான் அதனை பொறுப்பெடுக்க வேண்டும். அது வீடாக இருக்கலாம்

சங்காக இருக்கலாம். சங்கு என்றால் முதலில் அந்தப் பொறுப்பை கிருஷ்ணபிள்ளை லிங்கேஸ்வரனாகிய நான் ஏற்றுக் கொள்வேன். என்றார்.

# அம்பாரை மாவட்ட இந்து குருமார்கள் படகு சின்னத்தில் போட்டியிடும் சிவஸ்ரீ பகிரதன் சுகிர்தன் குருக்கள்

## சிவஸ்ரீ சச்சிதானந்த சிவம் குருக்கள்

**(வி.சுகிர்தகுமார் )**

அம்பாரை மாவட்ட இந்து குருமார்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியான படகு சின்னத்தில் 6ஆம் இலக்கத்தில் போட்டியிடும் சிவஸ்ரீ பகிரதன் சுகிர்தன் ஐயா அவர்களை ஆதரிக்கவுள்ளதாக கல்முனை சர்வார்த்த சித்திவிநாயகர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சச்சிதானந்த சிவம் குருக்கள் அவர்கள் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றின்போதே அவர் இவ்வாறு கூறினார்.




அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் அம்பாரை மாவட்டத்தில் பழமைவாத கட்சிகளால் தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ள நிலையில் புதியதொரு மாற்றத்தை கொண்டுவருவதற்காகவே தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியை ஆதரிக்கவுள்ளதாக கூறினார்.

இங்கு கருத்து தெரிவித்த சிவஸ்ரீ பகிரதன் சுகிர்தன்

சமுகத்தின் தேவை அறிந்தே அரசியல்வாதிகள் செயற்படவேண்டும். மாறாக அரசியல்வாதிகளின் தேவைக்கேற்ப அரசியல்களம் மாறக்கூடாது. இந்நிலையில் ஆலயங்கள் ரீதியாகவும் சமூகம் ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். தமிழர்களை புறக்கணித்தே பல்வேறு அரசியல் செயற்பாடுகள் கடந்த காலத்தில் இடம்பெற்றுள்ளது. கடந்த கால அரசியல் தலைவர்கள் தீர்வை மக்களுக்கு வழங்காமல் பாராளுமன்ற ஆசனங்களை சூடாக்கியவர்களாக மாத்திரமே இருந்துள்ளனர்.

இவற்றை கருத்திற்கொண்டே அம்பாரை மாவட்ட தமிழ் மக்களின் இருப்பை பாதுகாக்க நான் களத்தில் குதித்துள்ளேன் என்றார்.

# இலண்டனில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல்கள் வெளியீடு

அக்டோபர் 26 சனிக்கிழமை இலண்டன் மாநகரில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நான்கு நூல்கள் வெளியிடப்பட உள்ளது.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும், இலங்கை இதழியலில் சிவகுருநாதன், ஆகிய

ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நான்கு நூல்கள் வெளியீடு லண்டன் ஈலிங் அம்மன் கோவில் மண்டபத்தில்,

சனிக்கிழமை மாலை 1600 முதல் 1830 மணி வரை இவ் வெளியீட்டு நிகழ்வு நடைபெற உள்ளது. (London Ealing Amman temple, 5, Chapel Rd, London W13 9AE, U.K)

இந்நிகழ்வின் தலைமையுரையை இங்கிலாந்து சைவ மன்றங்களின் காப்பாளர் திரு. திரு. சிவா தம்பு அவர்கள் வழங்குவார். இந்நிகழ்வினை பிபிசி புகழ் விக்கி விக்கினராஜா அவர்கள் தொகுத்து வழங்குவார்.

இவ்வெளியீட்டு விழாவில் சைவப் புலவர், சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ. பா. வசந்தக் குருக்கள் ஆசியுரையை வழங்குவார். அத்துடன்

தமிழ் வாழ்த்துப் பாடலை இலண்டன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் பாடுவார்கள். நிகழ்வின் சிறப்பம்சமாக நாட்டிய கலா நிபுணா ஷோபிதா ஜெயசங்கரின் பரத கலாலயம் நடனப் பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சியும் இடம்பெறும்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த ஆவணக்காப்பாளர். திரு. பத்மநாப ஐயர், மற்றும் திரு. சி.கிருபாகரன், ஆகியோர் வழங்குவர்.

பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை திரு. சண்முகதாசன் அவர்கள் நிகழ்த்துவார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை திரு. நா. சபேசன் அவர்கள் ஆற்றுவார்.

தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும் நூலின் அறிமுகவுரையை டாக்டர்.வே. ரவிமோகன் அவர்கள் ஆற்றுவார். அத்துடன் இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை திரு. கோவிலூர் செல்வராஜன் அவர்கள் ஆற்றுவார்.

அத்துடன் இந்நூல் வெளியீட்டில் ஈழத்து சிற்றிதழ்கள் பற்றிய சிறப்புரையை திருமதி. மாதவி சிவலீலன் அவர்கள் வழங்குவார்.

இலண்டன் மாநகரில் நிகழும் இந்நூல் வெளியீட்டின் ஏற்புரையை திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள் நிகழ்த்துவார்.

# சாய்ந்தமருது குவாஷி நீதிமன்ற கட்டிடம் திறப்பு விழா




**(பாறுக் ஷிஹான்)**

சாய்ந்தமருது குவாஷி நீதிமன்ற கட்டிடம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு கல்முனை பிராந்திய மேல் நீதிமன்ற நீதிபதி ஜெயராமன் றொக்சியினால் நாடாவை வெட்டி திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது குவாஷி நீதிமன்ற நீதிபதி அஹமது லெவ்வை ஆதம்பாவா , குவாஷி நீதிமன்ற நிர்வாகச் செயலாளர் எஸ் ஜமால்தீன் , கல்முனை மேல் நீதிமன்ற பதிவாளர் ஏ.எல் அதிமுள்ளா , கல்முனை நீதிமன்ற வலயக் கணக்காளர் எம் .முஹம்மட் நஜீம் , நிந்தவூர் பிரதேச பொலிஸ் அதிகாரி ஏ. எல். எம் றஊப் , சாய்ந்தமருது பிரதேச செயலக உளவளத்துணை உத்தியோகத்தர் எம். டி பௌமிலா , கல்முனை மேல் நீதிமன்ற உத்தியோகத்தர் எம்.எப்னூ. எம் சமீம் மற்றும் சாய்ந்தமருது குவாஷி நீதிமன்ற நியாய சகாயர்களான எம்.ஐ உதுமாலெவ்வை , எம் எஸ் றவ்சூக் , ஏ. எம் றஸ்ஸீட், மௌலவி ஏ. எம் நவாஸ், எஸ். எல் றஸீட் மற்றும் சாய்ந்தமருது குவாஷி நீதிமன்றத்தின் பெண் நியாய சகாயர்களான ஏ. டபிள்யூ பாத்திமா ஷரோபா, ஏ. எம். பாத்திமா சஸ்ரின், எப். பாத்திமா அஹானி ஆகியோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இந்நிகழ்வில் சாய்ந்தமருது குவாஷி நீதிபதி ஏ. எல். ஆதம்பாவாவினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டு அதனைத் தொடர்ந்து அல்ஹாஜ் எம். ஐ. உதுமாலெவ்வை கல்முனை மேல் நீதிமன்றப் பதிவாளர் ஏ. எல் அதிமுள்ளா சாய்ந்தமருது பிரதேச செயலக உளவளத்துணை உத்தியோத்தர் எம். டி. பௌமிலா சிறு உரை மேற்கொண்டனர்.

பின்னர் இன்றைய நிகழ்வின் பிரதம அதிதியான கல்முனை பிராந்திய மேல் நீதிமன்ற நீதிபதி ஜெயராமன் றொக்சியினால் தெளிவானதும் விரிவானதுமான சிறப்புரை மேற்கொள்ளப்பட்டு பின்னர் சாய்ந்தமருது குவாஷி நீதிமன்ற நிர்வாகச் செயலாளர் எஸ் ஜமால்தீனின் நன்றியுரையுடன் நிகழ்வானது சிறு துஆவுடன் இனிதே நிறைவு பெற்றது.


மண்முனை வடக்கு பிரதேசக் கிளை நடாத்தும்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
வேட்பாளர்களின் பிரச்சாரக் கூட்டம்
இடம் – Treatooo Hall (செல்வா மண்டபம்), கல்லடி
திகதி – 27.10.2024 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் – பி.ப 2.00 மணி
அனைவரையும்
அன்புடன்
அழைக்கின்றோம்..!


நாடாளுமன்றத்
தேர்தல்
2024
ஆயிரக்கணக்கில் வாக்குகளை
பெற்று நாடாளுமன்ற செல்ல
மில்லியன் கணக்கில்
வாக்காளர், பார்வையாளர்களைக்
கொண்ட சுபீட்சம் ஊடகத்தில்
குறைந்த விலையில்
விளம்பரங்களை வெளியிடுங்கள்
077 664 5232 / 077 311 2601